**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 148 of 2019**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : வனிதா** | **Father/Husband's Name: நவீன்குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.02.2025**

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது நரிக்கல்பட்டி அக்கரைப்பட்டியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 20.06.2019 ம் தேதி காலை 8.30 மணியளவில் எனது மகன் சுகன் சுப்பிரமணி (வயது 5) என்பவரை BVB பள்ளியின் வேனில் ஏற்றிவிடுவதற்காக புளிமரத்து பஸ்ஸ்டாப் அருகே சென்று நின்று கொண்டிருந்தோம். அப்போது மேற்படி பள்ளி வாகனமானது புளியமரத்து பஸ்ஸ்டாப் அருகே வடக்கிலிருந்து தெற்காக வந்து நின்றது. நான் எனது மகனை கிழ புறம் சென்று பள்ளியின் வாகனத்தில் எனது மகனை ஏற்றிவிட்டேன். அப்போது எனது அண்ணன் மகன் ஆதிஸ் (வயது 1 1/2 ) அவர் என் பின்னால் வந்ததை நான் கவனிக்கவில்லை. அப்போது மேற்படி பள்ளியின் பேருந்து வாகனமானது எனது அண்ணன் மகன் மேற்கிலிருந்து கிழக்காக பள்ளியின் வாகனத்தின் முன்பு வந்ததை கவனிக்காமல் மேற்படி வாகனத்தை இயக்கியதில் மேற்படி எனது அண்ணன் மகன் பள்ளி வாகனம் மோதி கீழே விழுந்து கிடந்தார். அப்போது அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் மேற்படி எனது அண்ணன் மகன் ஆதிஸை நான் துாக்கி கொண்டு எனது அண்ணன் , எனது பெரியப்பா ஆகியோருக்கு தகவல் சொன்னேன். மேற்படி பள்ளியின் வாகனத்தை ஓட்டி வந்த நபர்ஆஜர் எதிரி தான். மேற்படி ஆஜர் எதிரி ஓட்டி வந்த பள்ளியின் வாகனத்தின் எண் .TN 37 AP 1416 ஆகும். மேற்படி விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரி

கவனிக்காமல் வாகனத்தை இயக்கியது தான் காரணம். பின்னர் காயம் பட்ட எனது அண்ணன் மகனை பழனியிலுள்ள வேல் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அவரை பரிசோதித்த மருத்துவர் எனது அண்ணன் மகன் ஏற்கனவே இறந்துவிட்டதாக எங்களுக்கு தகவல் சொன்னார்கள். பின்னர் கீரனூர் காவல் நிலையம் சென்று நான் புகார் அளித்தேன். நானும், உறவினர்களும் புகார் அளிக்க சென்றோம். புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. இல்லை

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2025.02.03 12:08:04 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 148 of 2019**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : வசந்தாமணி** | **Father/Husband's Name: சதிஷ்குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.02.2025**

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது சரவணம்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 20.06.2019 ம் தேதி சுமார் 8.30 மணியளவில் நான் எனது மகள் சுதக்சினா என்பவரை BVB பள்ளி வேனில் ஏற்றிவிடுவதற்காக சரவணம்பட்டி , புளியமர பஸ்ஸ்டாப்பிற்கு சென்ற போது பள்ளி வேனில் எனது மகளை ஏற்றிவிட்டு நின்று கொண்டிருந்தேன். அ.சா.1 வனிதா என்பவர் அவரது மகனை பள்ளி பேருந்தில் ஏற்றிவிடுவதற்காக அவரும் பள்ளி வேனுக்கு பின்னால் வந்து ஏற்றிவிட்டார். பின்னர் அ .சா.1 ன் அண்ணன் மகன் ஆதிஸ் என்பவர் அ.சா.1 க்கு பின்னால் அவரும் சம்பவ இடத்திற்கு வந்து நின்று கொண்டிருந்தார். நான் மேற்படி வேனில் எனது மகளை ஏற்றிவிட்டு கிழபுறமாக நின்றிருந்தேன். ஆதிஸ் என்பவர் பள்ளி வேனிற்கு முன்னால் மேற்கு புறமாக நின்று கொண்டிருந்தார். மேற்படி பள்ளி வாகனத்தை இயக்கி வந்த நபரின் பெயர் பிரபு , அவர் ஆஜர் எதிரி ஆவார். ஆஜர் எதிரி வேனிற்கு முன்னால் நின்றிருந்த ஆதிஸ் என்பவரை கவனிக்காமல் அஜாக்கிரதையாக பள்ளி வாகனத்தை இயக்கியதால் அ.சா.1 ன் அண்ணன் மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்து ஏற்படுத்திய அ.சா.1 ன் அண்ணன் மகன் ஆதிஸ் என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்த போக்கு ஏற்பட்டது. உடனே அ.சா.1 சென்று பார்த்த சத்தம் போட்டார். நானும் சத்தம் போட்டேன். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். பின்னர் அ.சா.1 அவரது**

உறவினர்களுக்கு தகவல் சொல்லிவிட்டு அ.சா.1 அவரது உறவினர்களுடன் பழனியில் உள்ள வேல் மருத்தவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் கூறினார்கள் என்று எனக்கு தகவல் சொன்னார்கள். மேற்படி விபத்திற்கு காரணம் மேற்படி பள்ளி வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் பிரபு அஜாக்கிரதையாகவும், கவனமில்லாமலும் மேற்படி வேனை TN 37 AP 1416 என்ற BVB பள்ளி வாகனத்தை இயக்கியது தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2025.02.03 12:08:10 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 148 of 2019**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : பழனிச்சாமி** | **Father/Husband's Name: சுப்பையா** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.02.2025**
**Accused present.**

**முதல் விசாரணை**

**1. நான் தற்போது சரவணம்பட்டியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது தம்பி மகள் ஆவார். கடந்த 20.06.2019 ம் தேதி காலை 8.30 மணியளவில் பள்ளி வாகனத்தில் அவரது மகனை ஏற்றிவிடுவதற்காக புளியமரத்து ஸ்டாப்புக்கு சென்றிருந்தார். அப்போது அ.சா.1 அண்ணன் மகனும் பின்னால் சென்றிருந்தார். பின்னால் சென்ற போது மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் திடிரென இயக்கிவிட்டார். அ.சா.1 ன் அண்ணன் மகன் பள்ளியின் வாகனம் மீது கீழே விழுந்ததில் அவருக்கு தலையில் அடிபட்டு பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் அ.சா.1 தகவல் சொன்னதன் பேரில் எனது மனைவி என்னிடம் சொன்னார். நான் தகவலின் பேரில் பழனி வேல் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அ.சா.1 ன் அண்ணன் மகன் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தகவல் சொன்னார்கள். ஆஜர் எதிரி தான் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் என்பதை கேட்டு தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரியை இன்று தான் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

**2. இல்லை**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2025.02.03 12:08:17 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி**